CELEBRATING
ESTD
1901
125 YEARS
HOLY FAMILY
KAJANG
REMEMBER · RENEW · REVIVE · REJOICE

திருக்குடும்ப நிலையங்கள்

தொடக்க இறைவேண்டல்

ஓ எங்கள் விண்ணக தந்தையே,
நன்றி நிறைந்த இதயங்களுடன், குடும்ப வாழ்வின் தலைவராகிய உம்மை நாங்கள் வணங்க வருகிறோம். உம்முடைய மகனாகிய இயேசுவின் மூலம், உம்முடைய தெய்வீக வாழ்க்கையை எங்களுடன் பகிர்ந்துள்ளீர்; எங்கள்மேல் உம்முடைய அன்பு எவ்வளவு பெரியது என்பதைக் காட்டுகின்றீர்.

தொடக்க இறைவேண்டல்

இயேசு, மரியா, யோசேப் ஆகிய திருக்குடும்பத்தின் வாழ்வில் நிகழ்ந்த இந்த மகத்தான நிகழ்வுகளை நாங்கள் தியானிக்கும் போது எங்களை வழிநடத்தும். இன்றைய காலத்தில் பல சிரமங்கள், சவால்கள் மற்றும் துயரங்களை அனுபவிக்கும் எங்கள் குடும்பங்களுக்காக, இந்த திருக்குடும்பம் அனுபவித்த அதே அனுபவங்களில் இவர்களின் உதவியை நாம் வேண்டுகின்றோம்.

தொடக்க இறைவேண்டல்

இந்த திருக்குடும்பம், எங்களுக்கு ஊக்கமும் தைரியமும் தரும் ஒரு மூலமாக இருக்கட்டும்.
இவர்கள், எல்லாச் சகோதர சகோதரிகளிடமும் பரஸ்பர அன்பையும் மரியாதையையும் காட்டும் நற்செய்தியைக் கடைப்பிடிக்க எங்களுக்கு வல்லமை அளிப்பார்களாக.

தொடக்க இறைவேண்டல்

இந்த திருக்குடும்பம் எங்களுக்கு ஊக்கமும் தைரியமும் தரும் ஒரு மூலமாக இருக்கட்டும். இவர்கள், எல்லாச் சகோதர சகோதரிகளிடமும் பரஸ்பர அன்பையும் மரியாதையையும் காட்டும் நற்செய்தியைக் கடைப்பிடிக்க எங்களுக்கு வல்லமை அளிப்பார்களாக .ஆமென்.

திருக்குடும்ப நிலையம் 1

கன்னி மரியாளுக்கு அறிவிக்கப்பட்டது

தலைவர் :

திருக்குடும்பமே, இயேசு, மரியே , புனித யோசேப்பே, உமது உதவியை நாடும் எங்களுக்காகப் பரிந்து பேசுமாறு வேண்டுகிறோம்.

அனைவரும்

ஏனெனில், உம்மில் நாங்கள் எங்கள் முழு நம்பிக்கையையும் முழு உறுதியையும் வைக்கிறோம்.

தியானம் :

லூக்கா 1:35-38

“தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலால், உம்மிடம் பிறக்கப் போகும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படும்.

தியானம் :

லூக்கா 1:35-38

உம் உறவினராகிய எலிசபெத்தும் தம் முதிர்ந்த வயதில் ஒரு மகனைக் கருத்தரித்திருக்கிறார். கருவுற இயலாதவர் என்று சொல்லப்பட்ட அவருக்கு இது ஆறாம் மாதம். ஏனெனில், கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை”

தியானம் :

லூக்கா 1:35-38

“பின்னர் மரியா, “நான் ஆண்டவரின் அடிமை; உம்சொற்படியே எனக்கு நிகழட்டும்”

சிந்தனைக்கு

கன்னி மரியாளுக்கான அறிவித்தல் என்ற இந்த புனித நிகழ்வினால் ஊக்கமடைந்து, அனைத்திற்கும் வல்ல தந்தையிடத்தில் நாம் குடும்பமாக ஒன்றுகூடுகிறோம்.

சிந்தனைக்கு

வரலாற்றில் உள்ள இந்த புனிதமான தருணத்தை நாம் சிந்திக்கும்போது, நம் வாழ்வில் எல்லாம் வல்ல தந்தையின் பிரசன்னத்தையும் வழிகாட்டுதலையும் நாடுகிறோம். மரியாள் செய்தது போலவே, அவருடைய தெய்வீக திருவுளத்தைப் பெற திறந்த இதயத்துடன் நாமும் இருப்போம்.

இறைவேண்டல் : அனைவரும்

புனித மரியே,
அமைதியின்மையும்
அச்சமும் நிறைந்த
நிலையிலும் கூட,
கடவுளின் அழைப்பிற்கு
“ஆம்” என்று சொல்ல
எங்களுக்கு கற்பியும்.

இறைவேண்டல் : அனைவரும்

இறைவனின் திட்டத்தை நாங்கள் நம்பிக்கைக் கொள்ளவும், அவை நம் புரிதலுக்கு அப்பாற்பட்டதாகத் தோன்றினாலும், முழு நம்பிக்கையோடு ஏற்றுக்கொள்ளவும் எங்களுக்கு உதவும்.

இறைவேண்டல் : அனைவரும்

அன்பு தாயே, எங்கள் நம்பிக்கையை பலப்படுத்தும், எங்கள் குடும்பங்களை முழு மனதுடன் கடவுளின் பணிக்கும், எங்கள் சக மனிதர்களின் பணிக்கும் அர்ப்பணிக்கும்படி எங்களை வழிநடத்துவீராக.

இறைவேண்டல் : அனைவரும்

தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாவதாக தொடக்கத்தில் இருந்ததுபோல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக. ஆமென்.

திருக்குடும்ப நிலையம் 2

ஆண்டவரின் தூதர்
புனித யோசேப்பின்
கனவில்
தோன்றினார்

தலைவர் :

திருக்குடும்பமே, இயேசு, மரியே , புனித யோசேப்பே, உமது உதவியை நாடும் எங்களுக்காகப் பரிந்து பேசுமாறு வேண்டுகிறோம்

அனைவரும்

ஏனெனில், உம்மில் நாங்கள் எங்கள் முழு நம்பிக்கையையும் முழு உறுதியையும் வைக்கிறோம்.

தியானம் :

மத்தேயு 1: 20-23

ஆண்டவரின் தூதர் அவருக்குக் கனவில் தோன்றி, “யோசேப்பே, தாவீதின் மகனே, உம்மனைவி மரியாவை ஏற்றுக்கொள்ள அஞ்ச வேண்டாம். ஏனெனில் அவர் கருவுற்றிருப்பது தூய ஆவியால்தான்.

தியானம் :

மத்தேயு 1 20-23

அவர் ஒரு மகனைப் பெற்றெடுப்பார். அவருக்கு இயேசு எனப் பெயரிடுவீர். ஏனெனில் அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்” என்றார்.

தியானம் :

மத்தேயு 1: 20-23

“இதோ! கன்னி கருவுற்று ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவர்”
என்று இறைவாக்கினர் வாயிலாக ஆண்டவர் உரைத்தது நிறைவேறவே இவை யாவும் நிகழ்ந்தன.
இம்மானுவேல் என்றால் ‘ கடவுள் நம்முடன் இருக்கிறார்’ என்பது பொருள். யோசேப்பு தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து ஆண்டவரின் தூதர் தமக்குப் பணித்தவாறே தம் மனைவியை ஏற்றுக்கொண்டார்.

சிந்தனைக்கு

தூதரின் செய்தியை புனித யோசேப்பு பெற்றபோது, அவரின் கீழ்ப்படிதலையும் விசுவாசத்தையும், இறைவனின் திருவருளில் அவர் வைத்த ஆழமான நம்பிக்கையையும் கண்டு நாங்கள் வியக்கிறோம்.

சிந்தனைக்கு

** குழப்பம் மற்றும் நிச்சயமின்மை நிறைந்த சூழ்நிலையிலும் கூட, ** புனித யோசேப்பு கடவுளின் வழிநடத்துதலின் மீது நம்பிக்கை வைத்து, தன் அன்புக்குரிய மகனின் பூலோகத் தந்தையாக இருக்க இந்த புனித பணியை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார்.

இறைவேண்டல் : அனைவரும்

அன்புள்ள புனித யோசேப்பே,
எங்கள் குடும்பங்களிலும்
உம்முடைய பரிந்துரையை
நாங்கள் வேண்டுகிறோம்.
எங்கள் உறவுகளை பாதுகாத்து
பலப்படுத்தும்;
ஒருவருக்கொருவர் கொண்ட
அன்பை ஆழப்படுத்தும் ;
திருக்குடும்பத்தின்
நற்குணங்களை நாங்கள் பின்பற
அருளை எங்களுக்கு வழங்கும்.

இறைவேண்டல் : அனைவரும்

மரியாளுடனும் இயேசுவுடனும் நீங்கள் இருந்தது போலவே, நாங்களும் நம்பிக்கை, நல்லிணக்கம் மற்றும் நிபந்தனையற்ற அன்பு நிறைந்த ஒரு சூழலை வளர்ப்போமாக..

இறைவேண்டல் : அனைவரும்

தந்தைக்கும், மகனுக்கும்,
தூய ஆவியாருக்கும்
மாட்சி உண்டாவதாக
தொடக்கத்தில்
இருந்ததுபோல
இப்பொழுதும்
எப்பொழுதும்
என்றென்றும் இருப்பதாக.
ஆமென்.

திருக்குடும்ப நிலையம் 3

மரியா யோசேப்பு திருமணம்

தலைவர் :

திருக்குடும்பமே, இயேசு, மரியே ,
புனித யோசேப்பே,
உமது உதவியை நாடும்
எங்களுக்காகப் பரிந்து
பேசுமாறு வேண்டுகிறோம்

அனைவரும்

ஏனெனில், உம்மில் நாங்கள் எங்கள்
முழு நம்பிக்கையையும் முழு
உறுதியையும் வைக்கிறோம்.

தியானம் :

மத்தேயு 1:18-21

அவருடைய தாய் மரியாவுக்கும் யோசேப்புக்கும் திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. அவர்கள் கூடி வாழும் முன் மரியா கருவுற்றிருந்தது தெரிய வந்தது. அவர் தூய ஆவியால் கருவுற்றிருந்தார்.

தியானம் :

மத்தேயு 1:18-21

அவர் கணவர் யோசேப்பு நேர்மையாளர். அவர் மரியாவை இகழ்ச்சிக்கு உள்ளாக்க விரும்பாமல் மறைவாக விலக்கிவிடத் திட்டமிட்டார். அவர் இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருக்கும்போது ஆண்டவரின் தூதர் அவருக்குக் கனவில் தோன்றி, “யோசேப்பே, தாவீதின் மகனே, உம்மனைவி மரியாவை ஏற்றுக்கொள்ள அஞ்ச வேண்டாம்.

தியானம் :

மத்தேயு 1:18-21

ஏனெனில் அவர் கருவுற்றிருப்பது தூய ஆவியால்தான். அவர் ஒரு மகனைப் பெற்றெடுப்பார். அவருக்கு இயேசு எனப் பெயரிடுவீர். ஏனெனில் அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்”

சிந்தனைக்கு

பல திருமணங்கள் துன்புறுகின்றன, இதற்க்கு காரணம் இந்த சிறப்பான அன்புப் பிணைப்பின் புனிதத்தை கணவன் மனைவி முழுமையாகப் புரிந்துகொள்வதில்லை.

சிந்தனைக்கு

தவறுகளைச் சரிசெய்வதற்குப் பதில், நம்பிக்கையற்றவர்களாக மாறவோ அல்லது உடன்படிக்கையைத் துறந்துவிடவோ தூண்டும் பல சோதனைகள் நம்மிடம் உள்ளன.

சிந்தனைக்கு

தங்கள் திருமண வாழ்க்கையில் எல்லா நாட்களிலும் துணையிருப்பதாக வாக்களித்த இறைவன் மீது, உறுதியான இறை நம்பிக்கையும் ஆழ்ந்த இறைவனில் நம்பிக்கையும் இல்லாததே பெரும் குறையாக இருக்கிறது..

இறைவேண்டல்:அனைவரும்

திருமணம் என்ற அருளடையாளத்தின் மூலம், ஒரு ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் அன்பு, நம்பிக்கை மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு புனிதமான உடன்படிக்கையின் உறவில் நுழைகிறார்கள்.

இறைவேண்டல் : அனைவரும்

நாங்கள் அனைத்துத் திருமணத் தம்பதியினருக்காகவும் வேண்டுகிறோம் . குறிப்பாக, இன்னல்களைச் சந்தித்துக்கொண்டிருக்கும் தம்பதியினருக்காக மன்றாடுகிறோம்; இவர்கள் தங்கள் வாக்குறுதிகளில் எப்போதும் உண்மையுள்ளவர்களாக இருக்கவும், தங்களுக்குள் இருக்கும் சிக்கல்களைத் தீர்க்கத் திருக்குடும்பத்தின் உதவியைத் நாடவும் அருள் புரியுமாறு உம்மிடம் வேண்டுகிறோம்.

இறைவேண்டல் :அனைவரும்

தந்தைக்கும்,
மகனுக்கும்,
தூய ஆவியாருக்கும்
மாட்சி உண்டாவதாக
தொடக்கத்தில்
இருந்ததுபோல
இப்பொழுதும்
எப்பொழுதும் என்றென்றும்
இருப்பதாக.
ஆமென்.

திருக்குடும்ப நிலையம் 4

இயேசு, தமது தாய் மரியாவுக்கும் தந்தை யோசேப்புக்கும் பிறந்தார்.

(ஒரு குழந்தையின் பிறப்பில் மனித வாழ்வின் புனிதத்தன்மை மிகச்சிறந்த முறையில் வெளிப்படுகிறது.)

தலைவர் :

திருக்குடும்பமே, இயேசு, மரியே ,
புனித யோசேப்பே,
உமது உதவியை நாடும்
எங்களுக்காகப் பரிந்து பேசுமாறு
வேண்டுகிறோம்.

அனைவரும்

ஏனெனில், உம்மில் நாங்கள் எங்கள
முழு நம்பிக்கையையும் முழு
உறுதியையும் வைக்கிறோம்.

தியானம் :

லூக்கா 2:6-7

அவர்கள் அங்கு இருந்தபொழுது மரியாவுக்குப் பேறுகாலம் வந்தது. அவர் தம் தலைமகனைப் பெற்றெடுத்தார். விடுதியில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. எனவே, பிள்ளையைத் துணிகளில் பொதிந்து தீவனத் தொட்டியில் கிடத்தினார்.

சிந்தனைக்கு

ஒருவரால் ஒரு குழந்தையை திட்டமிட்டு கொலை செய்வது என்பது நம்மால் நம்ப முடியாத ஒன்றாகும். இருப்பினும், கருகொலை செய்வது திட்ட மிட்டு செய்யும் கொலைக்கு ஒப்பாகும்.

கருத்தரிக்கும் அந்தக் கணத்திலிருந்தே, மீண்டும் ஒருபோதும் அதேபோல் உருவாக முடியாத ஒரு புதிய மனித வாழ்க்கை தொடங்குகிறது என்று நாங்கள் நம்புகிறோம்.

சிந்தனைக்கு

அப்படியென்றால், ஏன் சிலர் கருக்கலைப்பு செய்யும் உரிமைக்காக இவ்வளவு கடுமையாகப் போராடுகிறார்கள்? இதனால் ஒரு மனித உயிர் முடிவுக்கு வருகிறது. இந்த முடிவை எடுப்பவர்கள், கடவுளின் படைப்பான வாழ்வின் மதிப்பையும் அழகையும் இனி உணராதவர்களாக இருக்கலாம் என்பதே இதன் பொருளாகும்.

இறைவேண்டல் : அனைவரும்

கடவுள் படைத்த அனைத்தின் உண்மையான அழகையும் மகிமையும் ஒரு பச்சிளம் குழந்தையிடம் காணலாம். ஒவ்வொரு குழந்தையும் கடவுளின் அன்பை வெளிப்படுத்துகிறது; ஒவ்வொரு குழந்தையின் வழியாகவும் கடவுள் தனது எல்லையற்ற அன்பை நம்மோடு பகிர்ந்து கொள்கிறார்.".

ஜெபம் : அனைவரும்

ஒவ்வொரு மனிதரும் மனித உயிரை, முக்கியமாக கருவில் இருக்கும் குழந்தைகளை, மதித்து நடக்க வேண்டும் என்று நாம் மன்றாடுவோம். கருக்கலைப்புக்கும், கடவுளின் மிகச் சிறந்த மற்றும் விலையுயர்ந்த படைப்பான மனித உயிருக்குத் தீங்கு விளைவிக்கும் அனைத்துச் செயல்களுக்கும் ஒரு முடிவுக்கு வர வேண்டும் என்று நாம் தொடர்ந்து இறைவேண்டல் செய்வோம். •

இறைவேண்டல் :அனைவரும்

தந்தைக்கும், மகனுக்கும்,
தூய ஆவியாருக்கும்
மாட்சி உண்டாவதாக
தொடக்கத்தில்
இருந்ததுபோல
இப்பொழுதும்
எப்பொழுதும்
என்றென்றும் இருப்பதாக.
ஆமென்.

திருக்குடும்ப நிலையம் 5

மரியாவும் யோசேப்பும் குழந்தை இயேசுவை ஆலயத்தில் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தல்

(“கடவுளே குடும்பத்தின் முதன்மையாளர் : ஒரே குடும்பமாக அவரை வழிபட வேண்டும்.”)

தலைவர் :

திருக்குடும்பமே, இயேசு, மரியே ,
புனித யோசேப்பே,
உமது உதவியை நாடும்
எங்களுக்காகப் பரிந்து
பேசுமாறு வேண்டுகிறோம்.

அனைவரும்

ஏனெனில், உம்மில் நாங்கள்
எங்கள் முழு நம்பிக்கையையும்
முழு உறுதியையும் வைக்கிறோம்.

தியானம் :

லூக்கா *2:22-24;39*

மோசேயின் சட்டப்படி தூய்மைச் சடங்கை நிறைவேற்றவேண்டிய நாள் வந்தபோது குழந்தையை ஆண்டவருக்கு அர்ப்பணிக்க அவர்கள் எருசலேமுக்குக் கொண்டு சென்றார்கள்.

தியானம் :

லூக்கா 2:22-24;39

ஏனெனில், “ஆண் தலைப்பேறு அனைத்தும் ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்படும்” என்று அவருடைய திருச்சட்டத்தில் எழுதியுள்ளது.
அச்சட்டத்தில் கூறியுள்ளவாறு இரு மாடப்புறாக்கள் அல்லது இரு புறாக்குஞ்சுகளை அவர்கள் பலியாகக் கொடுக்க வேண்டியிருந்தது.

தியானம் :

லூக்கா 2:22-24;39

ஆண்டவருடைய திருச்சட்டப்படி எல்லாவற்றையும் செய்துமுடித்த பின்பு அவர்கள் கலிலேயாவிலுள்ள தங்கள் ஊராகிய நாசரேத்துக்குத் திரும்பிச் சென்றார்கள்.

சிந்தனைக்கு

“குடும்பங்கள் புனிதமாகவும், மகிழ்ச்சியாகவும், நலமாகவும் வாழ்வதற்கு, அனைத்தையும் படைத்த கடவுளோடு ஆழமான மற்றும் உண்மையான உறவைக் கொண்டிருப்பது அவசியம்.”

சிந்தனைக்கு

“குடும்பங்கள் திருப்பலியில் ஒன்றுகூடும்போது, புனிதத்தின் ஊற்றாகிய தந்தையோடு உரையாடவும், மகிழ்ச்சியின் உருவான மகனைத் தங்களில் ஏற்றுக் கொள்ளவும், குணமளிக்கும் தூய ஆவியானவர் நம்மைத் தொடுவதை உணர்கிறோம்.”.

சிந்தனைக்கு

“இருப்பினும், நம் பிள்ளைகளில் பலர் தங்கள் கத்தோலிக்க இறைநம்பிக்கையையும், திருப்பலி எனும் புனித பலியில் தந்தையாம் இறைவனை வழிபடுவதையும் கைவிட்டுள்ளனர். அவர்கள் மீண்டும் இறைவனிடம் திரும்பி வர நாம் இடைவிடாது இறைவேண்டல் செய்வோம். இதன்மூலம், ஒரு நாள் நம் குடும்பங்கள் மீண்டும் ஒன்றிணைந்து, அனைத்துக் குடும்பங்களுக்கும் வாழ்வையும் வலிமையையும் தரும் நம் இறைவனை ஒன்றாகத் தொழுவோமாக..”

இறைவேண்டல் : அனைவரும்

“அனைத்து ஆசீர்வாதங்களும் கடவுளிடமிருந்து தான் வருகின்றது என்று நாம் உறுதியாக நம்புகிறோம். கடவுள் நமக்குத் தரும் ஆசீர்வாதங்களில், நமது குடும்பத்தைவிட பெரிய கொடை வேறெது இருக்க முடியும்? இறைவனின் அனைத்துக் கொடைகளுக்காகவும் ஆசீர்வாதங்களுக்காகவும் அவருக்குப் புகழும் நன்றியும் செலுத்த நாம் கடமைப்பட்டுள்ளோம்..”

ம்

“நம் குடும்பத்தினர் அனைவருக்காகவும், குறிப்பாக கத்தோலிக்க படிப்பினையை பின்பற்றாதவர்களுக்காகவும் நாம் இறைவேண்டல் செய்வோம், நாம் ஆண்டவருடைய நாளில் ஒன்றுகூடி இயேசுவை திருப்பலியில் பங்கேற்க வேண்டுமென வேண்டுவோம். ஏனெனில், இவ்வுலகில் இறைவனுக்கு நாம் செலுத்தும் நன்றிக் காணிக்கைகளில் திருப்பலியே

ஜெபம் : அனைவரும்

தந்தைக்கும், மகனுக்கும்,
தூய ஆவியாருக்கும்
மாட்சி உண்டாவதாக
தொடக்கத்தில்
இருந்ததுபோல
இப்பொழுதும்
எப்பொழுதும்
என்றென்றும்
இருப்பதாக. ஆமென்.

திருக்குடும்ப நிலையம் 6

“திருக்குடும்பம் எகிப்துக்கு தப்பி செல்லுதல்.”

(“ஏழை மக்களுக்கும், துன்பப்படுவோர்களுக்கும், ஆதரவற்றவர்களுக்கும் துன்பப்படும் குடும்பங்களுக்கும் நாம் இரக்கம் காட்டுவோமாக.”)

தலைவர் :

திருக்குடும்பமே, இயேசு, மரியே ,
புனித யோசேப்பே,
உமது உதவியை நாடும்
எங்களுக்காகப் பரிந்து
பேசுமாறு வேண்டுகிறோம்.

அனைவரும்

ஏனெனில், உம்மில் நாங்கள்
எங்கள் முழு நம்பிக்கையையும்
முழு உறுதியையும்
வைக்கிறோம்

தியானம் :

மத்தேயு 2:13-15

அவர்கள் திரும்பிச் சென்றபின் ஆண்டவருடைய தூதர் யோசேப்புக்குக் கனவில் தோன்றி, “நீர் எழுந்து குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக் கொண்டு எகிப்துக்குத் தப்பி ஓடிச் செல்லும். நான் உமக்குச் சொல்லும்வரை அங்கேயே இரும். ஏனெனில், குழந்தையை ஏரோது கொல்வதற்காகத் தேடப்போகிறான்”

தியானம் :

மத்தேயு *2:13-15*

யோசேப்பு எழுந்து, குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக்கொண்டு, இரவிலேயே எகிப்துக்குப் புறப்பட்டுச் சென்றார். ஏரோது இறக்கும்வரை அங்கேயே இருந்தார்.இவ்வாறு, “எகிப்திலிருந்து என் மகனை அழைத்து வந்தேன்” என்று இறைவாக்கினர் வாயிலாக ஆண்டவர் உரைத்தது நிறைவேறியது.

சிந்தனைக்கு

“உலகெங்கிலும் எண்ணற்ற குடும்பங்கள் அனுபவித்து வரும் இந்தத் துயரம் சொல்லொணா வலி நிறைந்தது. போர், வழக்கு, வறட்சி மற்றும் பஞ்சம் போன்ற காரணங்களால் தங்கள் பிள்ளைகளை விட்டு பிரிந்து, சொந்த மண்ணிலேயே அகதிகளாகவும், வீடற்றவர்களாகவும் அலைந்து கொண்டிருக்கும் பெற்றோர்களின் நிலை மிகவும் வேதனையானது..”

சிந்தனைக்கு

“ஏராளமான வசதிகள் கொண்ட நாடுகளிலும் கூட, பல குடும்பங்கள் மிகுந்த வறுமையில் வாடுகின்றன. இன்னும் பல குடும்பங்கள் வன்முறைகளிலும், போதைப்பொருள் அடிமைத்தனம் அல்லது புறக்கணிப்பினால் சொல்லொணாத் துயரங்களை அனுபவிக்கின்றன. இவர்களின் தேவைகளைக் கண்டு நாம் நம் மனதையும் இதயத்தையும் மூடிக்கொள்ளக் கூடாது; ஏனெனில் இவர்களும் நம் தந்தையின் பிள்ளைகளே..”

இறைவேண்டல் : அனைவரும்

“எல்லாம் வல்ல தந்தையே, வெகு காலத்திற்கு முன்பு இந்தப் புனிதக் குடும்பத்தைப் போலவே, உம்முடைய பிள்ளைகள் பலர் இன்றும் இந்த நவீன உலகத்திலும் துன்பப்படுகிறார்கள். நாங்கள் இவர்கள் மீது அன்பையும் கருணையையும் வெளிப்படுத்த எங்களுக்கு அருள் புரியும்..”

இறைவேண்டல் : அனைவரும்

“. இவர்களுக்கு நமது இறைவேண்டல்களையும், ஆறுதலையும், ஆதரவையும் வழங்குவோம்; இறைவன் இவர்களைக் குணப்படுத்தி, இவர்களுக்கு அமைதியை வழங்க இறைவனிடம் வேண்டுவோம். ”

இறைவேண்டல் :அனைவரும்

தந்தைக்கும், மகனுக்கும்,
தூய ஆவியாருக்கும்
மாட்சி உண்டாவதாக
தொடக்கத்தில்
இருந்ததுபோல
இப்பொழுதும்
எப்பொழுதும்
என்றென்றும்
இருப்பதாக. ஆமென்.

திருக்குடும்ப நிலையம் 7

“"புனித யோசேப்பும் அன்னை மரியாவும் கோவிலில் காணாமல் போன இயேசுவைக் கண்டடைதல்”

“பெற்றோரின் வேதனைகள் : இறை நம்பிக்கை உள்ள பெற்றோர்களாக இருப்பதின் சவால்கள். ”

தலைவர் :

திருக்குடும்பமே, இயேசு, மரியே ,
புனித யோசேப்பே,
உமது உதவியை நாடும்
எங்களுக்காகப் பரிந்து
பேசுமாறு வேண்டுகிறோம்.

அனைவரும்

ஏனெனில், உம்மில் நாங்கள்
எங்கள் முழு நம்பிக்கையையும்
முழு உறுதியையும்
வைக்கிறோம்

தியானம் :

லூக்கா 2:46-48

மூன்று நாள்களுக்குப்பின் அவரைக் கோவிலில் கண்டார்கள். அங்கே அவர் போதகர்கள் நடுவில் அமர்ந்து அவர்கள் சொல்வதைக் கேட்டுக் கொண்டும் அவர்களிடம் கேள்விகளை எழுப்பிக் கொண்டுமிருந்தார். அவற்றைக் கேட்ட அனைவரும் அவருடைய புரிந்து கொள்ளும் திறனையும் அவர் அளித்த பதில்களையும் கண்டு மலைத்துப் போயினர்.

தியானம் :

லூக்கா 2:46-48

“அவருடைய பெற்றோரும் அவரைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தனர். அப்பொழுது அவருடைய தாய் அவரை நோக்கி, “மகனே, ஏன் இப்படிச் செய்தாய்? இதோ பார், உன் தந்தையும் நானும் உன்னை மிகுந்த கவலையோடு தேடிக்கொண்டிருந்தோமே”

சிந்தனைக்கு

“நற்பண்புகள் கொண்ட பெற்றோராக விளங்குவதற்குத் தன்னலமற்ற அர்ப்பணிப்பும், அயராத உழைப்பும் இன்றியமையாதவை. தம் குழந்தைகளின் வளமான எதிர்காலத்திற்காகத் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளைத் துறந்து, எத்தகைய தியாகத்திற்கும் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளும் மனதிடத்தைப் பெற்றோர்கள் பெற வேண்டும்.”

சிந்தனைக்கு

“தன்னலமற்ற அன்பு எனும் இந்தப் பேரினிய பாடத்தைப் பல பெற்றோர்கள் இன்னும் கற்றுக்கொள்ளவில்லை. குழந்தைகளின் நலனைவிடத் தனது தனிப்பட்ட விருப்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கத் துடிக்கும் அந்தத் தூண்டுதலானது, ஒருபோதும் ஓய்வதில்லை..”

இறைவேண்டல் : அனைவரும்

“பெற்றோராகும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட அனைத்துத் கணவன் மனைவியரும், இந்தப் புனிதமான அழைப்பு கோரும் சவால்களையும் மனமுவந்து ஏற்றுக்கொள்ள வேண்டுமென நாம் இறைவனை வேண்டுகிறோம்..”

இறைவேண்டல் : அனைவரும்

“ஓ திருக்குடும்பமே, தங்கள் பிள்ளைகளும் அன்பு செய்யவும், பணிபுரியவும் கற்றுக்கொள்ளும் பொருட்டு, பெற்றோர்கள் தங்களையே தியாகம் செய்ய வேண்டிய கடமையை மறந்துவிடாதிருக்கச் செய்தருளும்.”

ஜெபம் : அனைவரும்

தந்தைக்கும், மகனுக்கும்,
தூய ஆவியாருக்கும்
மாட்சி உண்டாவதாக
தொடக்கத்தில்
இருந்ததுபோல
இப்பொழுதும்
எப்பொழுதும்
என்றென்றும்
இருப்பதாக. ஆமென்.

திருக்குடும்ப நிலையம் 8

“நாசரேத்தில் திருக்குடும்பம்

(“ஒரு புனிதமான, மகிழ்ச்சியான மற்றும் நிலையான குடும்பத்தின் முக்கியத்துவம்”)

தலைவர் :

திருக்குடும்பமே, இயேசு, மரியே , புனித யோசேப்பே, உமது உதவியை நாடும் எங்களுக்காகப் பரிந்து பேசுமாறு வேண்டுகிறோம்.

அனைவரும்

ஏனெனில், உம்மில் நாங்கள் எங்கள் முழு நம்பிக்கையையும் முழு உறுதியையும் வைக்கிறோம்

தியானம் :

லூக்கா 2:39-40

ஆண்டவருடைய
திருச்சட்டப்படி
எல்லாவற்றையும்
செய்துமுடித்த பின்பு அவர்கள்
கலிலேயாவிலுள்ள தங்கள்
ஊராகிய நாசரேத்துக்குத்
திரும்பிச் சென்றார்கள்.
குழந்தையும் வளர்ந்து வலிமை
பெற்று ஞானத்தால் நிறைந்து
கடவுளுக்கு உகந்ததாய்
இருந்தது.

சிந்தனைக்கு

“அமைதி, பாதுகாப்பு மற்றும் நிலையான நிலை நிறைந்த ஒரு சூழலில் மட்டுமே ஒரு குடும்பத்தால் புனிதத்தையும் மகிழ்ச்சியையும் பெற முடியும். ஆனால், இன்று இதற்கு முற்றிலும் மாறுபட்ட கசப்பான அனுபவங்களையே பல குடும்பங்கள் எதிர்கொள்கின்றன.”

சிந்தனைக்கு

“சிதைந்த திருமண உறவுகள், உடல் மற்றும் மன அளவிலான துன்புத்தல்கள் , கட்டுக்கடங்காத கோபம் மற்றும் விரக்தி ஆகியவை - அமைதி, பாதுகாப்பு மற்றும் நிலைப்புத்தன்மைக்கு எதிரான ஒரு பகைமையான சூழலை உருவாக்கியுள்ளன.”

சிந்தனைக்கு

“நாம் இறைவனின் அடிப்படைத் திட்டத்திற்கு மீண்டும் திரும்புவோம்: தந்தை மற்றும் தாய் ஒருவருக்கொருவர் உண்மையாக இருப்பதோடு, குடும்பத்திற்காகத் தங்களை அர்ப்பணிக்க வேண்டும்; இதற்குத் திருமண அருட்சாதனத்தின் வழியாகக் கிடைக்கும் இறைவருள் துணையாக அமையும்.”

இறைவேண்டல் : அனைவரும்

“எங்கள் பிரார்த்தனை, அனைத்து குடும்பங்களும் பரிசுத்த குடும்பத்தின் உதாரணத்தைப் பின்பற்றி, இறைவன் மட்டுமே தரக்கூடிய அமைதி மற்றும் சந்தோஷத்தை அடைய உழைக்கட்டும். ஆண்டவரே, அவர்கள் எல்லா முயற்சிகளிலும் அவர்களுடன் இருங்கள். அவர்களது விசுவாசத்திற்கு பதிலளியுங்கள்.”

ஜெபம் : அனைவரும்

தந்தைக்கும், மகனுக்கும்,
தூய ஆவியாருக்கும்
மாட்சி உண்டாவதாக
தொடக்கத்தில்
இருந்ததுபோல
இப்பொழுதும்
எப்பொழுதும்
என்றென்றும்
இருப்பதாக. ஆமென்.

இறுதி இறைவேண்டல்

“எல்லாம் வல்ல தந்தையே , திருக்குடும்பத்தின் வாழ்வில் நிகழ்ந்த இந்த நிகழ்வுகளை நாங்கள் இறைவேண்டலோடு மீண்டும் தியானித்துள்ளோம்.

திருக்குடும்பம் மட்டுமே வழங்கக்கூடிய இந்த அன்பு, வழிகாட்டுதல் மற்றும் ஆற்றல் எங்கள் குடும்பத்திலும் தேவைப்படுவதால் நாங்கள் இந்த ஆன்மீகப் திருப்பயணத்தை மேற்கொண்டுள்ளோம்.”

இறுதி இறைவேண்டல்

“இயேசு, மரி மற்றும் யோசேப்பு ஆகியோரின் வாழ்வின் நிகழ்வுகளைத் தியானித்ததத்தின் மூலம், இவர்களின் மகிழ்ச்சி எமது மகிழ்ச்சி என்றும், இவர்களின் சவால்கள் எங்களது சவால்கள் என்றும், இவர்களின் துயரங்கள் எங்களது துயரங்கள் என்றும் நாங்கள் உணர்ந்துகொண்டோம். ஆகவே, முழு நம்பிக்கையுடன் எங்கள் குடும்பங்களைப் திருக்குடும்பத்தின் அன்பான அரவணைப்பில் ஒப்படைக்கின்றோம்..”

இறுதி இறைவேண்டல்

“அவர்களின் பரிந்துரையின் வழியாக, எங்கள் குடும்பங்கள் அன்பிலும் நல்லிணக்கத்திலும் வளரச் செய்தருளும். உமது திருவுளத்தை நிறைவேற்றத் துடிக்கும் அனைவருக்கும் இந்தப் திருக்குடும்ப ஒரு சிறந்த முன்மாதிரியாக விளங்குவதாக. மேலும், திருக்குடும்பத்தின் வாழ்வை முன்மாதிரியாகக் கொண்டு வாழ்வதே, அனைத்துக் குடும்பங்களின் புனிதத்தன்மைக்கு அடிப்படையான இந்த அன்பையும் மரியாதையையும் பெறுவதற்கான ஒரே வழி என்பதை நாங்கள் அனைவரும் இன்னும் முழுமையாக உணர்ந்து கொள்ள அருள்புரியும்.”

இறுதி இறைவேண்டல்

“விண்ணகத் தந்தையே, உமது இறைநம்பிக்கையுள்ள மற்றும் அன்பார்ந்த பிள்ளைகளாக வாழ முயற்சிக்கும் எமக்கு உமது அருளை வழங்கியருளும். நாசரேத்து திருக்குடும்பத்தின் பரிந்துரை வழியாக, எங்கள் குடும்பங்கள் நல்ல மற்றும் புனித குடும்பங்களாகத் திகழவும், உமது திருப்பெயரின் மேன்மைக்காகவும் எங்களது நிலையான மீட்பிற்காகவும் அனைத்துச் செயல்களிலும் உம்மை மகிழ்விக்கத் தேடவும் எங்களுக்கு துணைபுரியும். ஆமென்.”.”

இறுதி இறைவேண்டல்

தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாவதாக, தொடக்கத்தில் இருந்ததுபோல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக.

ஆமென்